பக்கங்கள் 20+3

# மாலை முரசு

## ஹர்த்தாலுக்கு மனோ அணி முழு ஆதரவு



"முல்லைத்தீவு, முத்துஐயன்கட்டு இராணுவமுகாமுக்குச் சிப்பாய்களால் அழைத்துச் செல்லப்பட்டு 04

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆடி 26 திங்கட்கிழமை 11.08.2025 | அதிர்வு 11

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# கபில்ராஜ்ஜின் புகழுடல் இன்று நல்லடக்கம் முத்துஐயன்கட்டில் குவிக்கப்பட்ட பொலிஸ்

## தமிழரசுக் கட்சியினர் அஞ்சலி

(பா.சதீசன், விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு - முத்துஐயன் கட்டுப் பகுதியில் இராணுவத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்த இளம் குடும்பஸ்தரான எதிர் மன்னசிங்கம் கபில்ராஜ்ஜின் புகழுடல் இன்று நல்லடக்கம் செய்யப்படவுள்ள நிலையில், பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன 05











# தென்மராட்சியில் 4 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து!

## ஒருவர் உயிரிழப்பு; நால்வர் படுகாயம்

யாழ்ப்பாணம், தென்மராட்சியில் நான்கு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் நால்வர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் – கண்டி நெடுஞ் சாலையில் ஆசைப்பிள்ளை ஏற்றம் பகுதியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இரவு இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

டிப்பர் , கூலர், கார் மற்றும் மோட் டார் சைக்கிள் என்பன ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள் ளது. அதில் ஐவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர்களில் ஆண் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரி ழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன் னெடுத்துள்ளனர்.







# புங்குடுதீவில் கத்திக்குத்துத் தாக்குதல் ஒருவர் உயிரிழப்பு; நால்வர் படுகாயம்

**(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம், புங்குடுதீவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு இடம் பெற்ற கத்திக்குத்துத் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இரு பெண்கள் உள்ளிட்ட நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தை சேர்ந்த அற்புதராசா அகிலன் (வயது 40) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் மீது சரமாரியாககே கத்திக்குத்துத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் அந்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.



இதேவேளை, கத்திக்குத்துத் தாக்குதலை மேற்கொண்ட நபரைப் பிடிக்க முயன்ற இரு பெண்கள் உள்ளிட்ட நால்வர் மீதும் கத்திக்குத்து தாக்குதலை மேற்கொண்டு விட்டு தாக்குதலாளி தப்பிச் சென்றுள்ளார்.

தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த நால்வரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மட்டக்களப்பில் ஆணின் சடலம் மீட்பு!





மட்டக்களப்பு, கொக்குவில் – சவுக்கடி பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் இன்று மீட்கப்பட்டுள்ளது.

ஏறாவூர் பகுதியிலுள்ள உறவினரது தங்க ஆபரண விற்பனை நிலையத்தில் பணியாற்றும் 34 வயதுடைய நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை வீட்டை விட்டு வெளியேறியவர் இரவாகியும் வீடு திரும்பாததால் குடும்பத்தினர் அவரைத் தேடி வந்துள்ளனர்.

இந்நிலையில் இன்று சவுக்கடி கடற்கரைப் பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் காணப்படுகின்றது என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸாரும், தடயவியல் பிரிவு பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சம்பவ இடத்தில் உயிரிழந்தவரின் மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளது.

# யாழில் இனந்தெரியாத ஆணின் சடலம் மீட்பு!

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ். மண்கும்பான் கடற்கரைப் பகுதியில் இனந்தெரியாத ஆண் ஒருவரின் சடலம் இன்று மாலை மீட்கப்பட்டுள்ளது.

சடலம் ஒன்று மேற்படி கடற்பகுதியில் மிதப்பதாகக் கிராம மக்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதன் அடிப்படையில் ஊர்காவற்துறைப் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தந்து சடலத்தைப் பார்வையிட்டனர்.



ஊர்காவற்துறைப் பொலிஸாரின் விசாரணைகளின் பின் சடலம் கடலில் இருந்து மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வடக்கு, கிழக்கில் ஹர்த்தால்: இ.தொ.காவினர் முழு ஆதரவு

## ஜீவன் தொண்டமான் எம்.பி. அறிக்கையூடாக அறிவிப்பு



வடக்கு, கிழக்கில் எதிர்வரும் 15 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஹர்த்தாலுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் முழு ஆதரவு தெரிவித்துள்ளார்.

"முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் – முத்துஐயன்கட்டுப் பகுதியில் இராணுவத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்தார் எனக் கூறப்படும் இளைஞரின் மரணத்துக்கு நீதி கோரி நடைபெறவுள்ள ஹர்த்தாலுக்கு இலங்கையராகவும், மலையகத் தமிழராகவும், எனது முழுமையான ஆதரவைத் தெரிவிக்கின்றேன்." – என்று அறிக்கையொன்றின் ஊடாக ஜீவன் தொண்டமான் எம்.பி. அறிவித்துள்ளார்.

"நீதிக்காகவும், இராணுவத்தின் அநீதியான நடவடிக்கைகளுக்கு எதிராகவும் நடைபெறவுள்ள இந்தக் ஹர்த்தாலுக்கு எனது உறுதியான ஆதரவை வெளிப்படுத்துகின்றேன்.

யுத்தம் நிறைவடைந்து 16 ஆண்டுகள் கடந்த பின்பும், இவ்வாறான மனிதாபிமானமற்ற செயற்பாடுகள் நிகழ்வது மிகவும் வருத்தமளிக்கின்றது. இப்படியான சம்பவங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை." – என்றும் ஜீவன் தொண்டமான் எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**ஹர்த்தாலுக்கு...**

சித்திரவதைக்குள்ளாகிய இளைஞர்களில் ஒருவர், முத்துஐயன்கட்டுக் குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சி, "நீதியான விசாரணை", "வடக்கு – கிழக்கில் இருந்து மேலதிக இராணுவம் குறைப்பு" ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை வடக்கு, கிழக்கில் நடத்தும் முழு அடைப்பு என்ற ஹர்த்தாலை நாம் ஆதரிக்கின்றோம். ஹர்த்தால் சொல்லும் செய்தியை ஜனாதிபதி – பாதுகாப்பு அமைச்சர் அநுரகுமார திஸாநாயக்க கவனத்தில் எடுக்க வேண்டும்."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"ஐந்து தமிழ் இளைஞர்கள், கடந்த 7ஆம் திகதி முத்துஐயன்கட்டு இராணுவ முகாமுக்குச் சிப்பாய்களால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். பின்னர் அவர்கள் அந்த முகாமில் இருந்து தப்பிச் சென்றதாகக் கூறப்படுகின்றது. தப்பிச் சென்றவர்களில் ஒருவரான, கபில்ராஜ், 9 ஆம் திகதி முத்துஐயன்கட்டுக் குளத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தப்பிச் சென்ற ஏனைய நால்வர், தம்மை இராணுவத்தினர் கடுமையாகத் தாக்கி சித்திரவதை செய்ததாகக் குற்றம் சாட்டியுள்ளனர். ஆகவே, என்ன நடந்தது என்பதை ஊகிப்பது கடினமானது அல்ல.

இந்தச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சி, "நீதியான விசாரணை", "வடக்கு – கிழக்கில் இருந்து மேலதிக இராணுவம் குறைப்பு" ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடத்தும் முழு அடைப்பு என்ற ஹர்த்தாலை நாம் ஆதரிக்கின்றோம்.

ஜனாதிபதி – பாதுகாப்பு அமைச்சர் அநுரகுமார திஸாநாயக்க, இது தொடர்பில் உடன் விசாரணை, தண்டனைக்கு உரிய சட்ட நடவடிக்கை, ஆகியவற்றை ஏற்பாடு செய்ய வேண்டும். அத்துடன் இதை அடிப்படையாகக் கொண்டு, வடக்கு, கிழக்கின் மேலதிக இராணுவப் பிரசன்னத்தை உடன் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

"இராணுவப் பிரசன்னம் குறைப்பு" என்பதுதான் இந்தக் ஹர்த்தால் சொல்லப் போகும் செய்தி. போர் செய்த இராணுவம் சும்மா இருக்காது. அதிலும் இன அடிப்படையிலான போர் செய்த இராணுவச் சிப்பாய்களின் மனங்களில் இனவாதம் தங்கி இருக்கத்தான் செய்யும். எனவே, அவர்களை தென்னிலங்கைக்குக் கொண்டு வந்து, "குளம் வெட்டுவது, குளத்தில் தூர் எடுப்பது, வீதி அமைப்பது, வீடு கட்டுவது, ஹோட்டல் நடத்துவது, தோட்டம் செய்வது, காய்கறி சந்தை நடத்துவது" போன்ற இன்ன பிற அபிவிருத்திப் பணிகளில், ஜனாதிபதி – பாதுகாப்பு அமைச்சர் அநுரகுமார திஸாநாயக்க ஈடுபடுத்த வேண்டும்.

"இதற்கு முன் இப்படியான சம்பவங்கள் நடக்க வில்லையா? அப்போது நீங்கள் என்ன செய்தீர்கள்?" என எம்மைப் பார்த்து, தம்மை அறிவாளிகள் என நினைத்துக் கொண்டு, கேள்வி கேட்கும், ஜே.வி.பி. அமைச்சர்கள், எம்.பிக்கள் ஆகியோரின் வாய்ப்புகளையும் ஜனாதிபதி – பாதுகாப்பு அமைச்சர் அநுரகுமார திஸாநாயக்க மூட வேண்டும்.

"அன்றைய அரசுகள் மாறி, மாறி செய்தவற்றைச் செய்ய நாம் வரவில்லை. மாற்றி செய்யவே நாம் வந்தோம்" என நீங்கள்தான் மக்களுக்குக் கூறினீர்கள். அதேயேதான் நீங்களும் செய்ய வந்தீர்கள் என்றால், நாம் எதிர்க்கத்தான் செய்வோம்.

அரச இராணுவப் பயங்கரவாதத்தை, நாம் அப்போதும் எதிர்த்தோம். இப்போதும் எதிர்க்கின்றோம். எப்போதும் எதிர்ப்போம். வடக்கு கிழக்கில் அனைத்து மாவட்டங்களிலும் வெள்ளிக்கிழமை முழு அடைப்பு நடைபெற அழைப்பு விடுத்து இருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கோரிக்கையைத் தமிழ் முற்போக்குக் கூட்டணி வரவேற்று, ஆதரவை அறிவிக்கின்றது." – என்றுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**கபில்ராஜ்ஜின்....**

இதேவேளை, கபில்ராஜ்ஜின் புகமுடலுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோரின் தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியினரால் இன்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பிரதேச சபைகளின் தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், தமிழரசுக் கட்சியின் தொண்டர்கள் உள்ளிட்ட பலரும் இந்த அஞ்சலி நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

மேலும் இதன்போது இராணுவத்தின் தாக்குதல் சம்பவம் தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏசுமந்திரன் பாதிக்கப்பட்டவர்களிடம் கேட்டறிந்து கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.








# வடக்கு, கிழக்கு அரசியல் பிரதிநிதிகளை ஒன்றிணைத்து மன்னாரில் போராட்டம்!

## காற்றாலை மின் கோபுரம் அமைத்தல், கனிய மணல் அகழ்வுக்கு எதிராக முன்னெடுக்க நடவடிக்கை என்கிறார் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.

(மன்னார் நிருபர்)

ஆயுதப் போராட்டமாக இருந்தாலும் சரி, அகிம்சை வழி போராட்டமாகவும் இருந்தாலும் சரி மண்ணையும்மக்களையும்மீட்கவே, இந்தமண்ணில் இடம் பெற்றன.

இந்த நிலையில் மன்னார் மக்களின் வாழ்வைப் பாதிக்கும் வகையில் முன்னெடுக்கப்படும் காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக வடக்கு, கிழக்கில் உள்ள அரசியல் பிரதிநிதிகளை எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை மன்னாரில் ஒன்றிணைத்து 'எமது நிலம் எமக்கு வேண்டும்' எனும் தொனிப்பொருளில் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இன்று (11) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னாரில் முன்னெடுக்கப்பட்டுவரும் 2 ஆம் கட்ட காற்றாலை கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக போராட்டம் ஒன்றை மன்னாரில் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.



எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மன்னார் பஜார் பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ள இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ள வடக்கு கிழக்கைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், வடக்கு, கிழக்கை சேர்ந்த அரசியல் செயற்பாட்டாலர்களைக் குறித்த போராட்டத்தில் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கின்றோம்.

குறித்த போராட்டம் ஊடாக நாங்கள் தென்னிலங்கைக்கு ஓர் செய்தியை சொல்ல வேண்டும். எமது மக்களையும் மண்ணையும் யாரும் அபகரிக்க முடியாது. நாங்கள் துப்பாக்கி ஏந்திப் போராடிய போது தியாகங்களை செய்தவர்கள்.

எனவே அரசியல் கட்சி பேதங்களின்றி நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகர சபை, பிரதேச சபை, மாநகர சபை உறுப்பினர்கள் அனைவரும் குறித்த போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

தென்னிலங்கைக்கு நாங்கள் பாடம் புகட்டும் வகையில் எமது மண்ணையும் மக்களையும் காப்பற்றும் வகையில் இடம் பெறும் இந்தப் போராட்டத்தில் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.- என்றார்.

## இலங்கைக் கடற்படையின் கைது நடவடிக்கையால்

# இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம்!



(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கை கடற்படையின் தொடர் கைது நடவடிக்கை கண்டித்தும், இலங்கை சிறையில் உள்ள மீனவர்கள் விடுதலை செய்ய வலியுறுத்தி இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் இன்று (11) திங்கட்கிழமை காலை முதல் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இராமேஸ்வரம் மீன் பிடித்தல் முகத்தில் இருந்து மீன்பிடி தடைக் காலம் முடிந்து மீன்பிடிக்க சென்ற 55 நாள்களில் 61 மீனவர்களை ஒன்பது படகுகளுடன் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இலங்கை கடற்படை கைது செய்துள்ளனர்.

மீனவர்களின் இந்த தொடர் கைது நடவடிக்கையை கண்டித்தும், இலங்கை சிறையில் உள்ள மீனவர்களைப் படகுடன் உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தியும் இன்று (11) திங்கட்கிழமை காலை முதல் இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தொடங்கியுள்ளனர்.

இந்த வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக இராமேஸ்வரத்தில் சுமார் 600 இற்கும் மேற்பட்ட மீன்பிடி விசைப் படகுகள் மீன்பிடிக்கக் கடலுக்கு செல்லாமல் கரையில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளன. சுமார் 20,000 மேற்பட்ட மீனவர்கள் நேரடியாக ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மீன்பிடி சார்பு தொழிலாளர்களும் வேலை இழந்துள்ளனர்.

இராமேஸ்வரம் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லாததால் நாள் ஒன்றுக்கு சுமார் ஒரு கோடி ரூபாவரை அந்நிய செலவாணி பாதிக்கப்பட்டுள்ளது என்று மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

எல்லை தாண்டி மீன் பிடித்தனர் என்று கைது செய்யப்பட்டு இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும், தவறும் பட்சத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி ஆர்ப்பாட்டமும், 15 ஆம் திகதி உண்ணாவிரத போராட்டமும், 19 ஆம் திகதி ரயில் மறியல் போராட்டத்திலும் ஈடுபடப் போகின்றனர் என்று மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

எப்போதும் பரபரப்பாக காணப்படும் இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகம் காலவரையறையற்ற வேலை நிறுத்தம் காரணமாக வெறிச்சோடி காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஹர்த்தால் அழைப்பு

முல்லைத்தீவு, முத்தையன்கட்டுப் பகுதியில் இராணுவத்தினரின் அடாவடித்தனமான நடவடிக்கையில் தமிழ் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவித்து, அதன் அடிப்படையில் வரும் வெள்ளிக்கிழமை 15 ஆம் திகதி வடக்கு, கிழக்கில் இடம்பெறவிருக்கும் ஹர்த்தால் நடவடிக்கைக்கு தங்களுடைய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முழு ஆதரவை அந்தக் கட்டமைப்பின் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினரான ஜீவன் தொண்டமான் தெரிவித்திருக்கிறார்.

யுத்தம் முடிந்து 16 ஆண்டுகளின் பின்னரும் இத்தகைய மனிதாபிமானமற்ற மோசமான செயல்கள் தொடர்வது வேதனைக்குரியது என ஜீவன் தொண்டமான் எம்.பி. குறிப்பிட்டிருக்கின்றார்.

அதே போல இந்த ஹர்த்தாலை ஆதரித்துள்ள தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் இந்த ஹர்த்தால் செல்லும் செய்தியை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா கவனத்தில் எடுக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், பொதுச் செயலாளரும் தனித்து முத்தையன்கட்டுச் சம்பவத்திற்கு எதிரான நடவடிக்கையாக அதை முன்னெடுக்கவில்லை.

தமிழர் தாயகத்தில் அளவுக்கு மீறி மேற்கொள்ளப்பட்டிருக்கும் இராணுவப் பிரசன்னம் அல்லது படைக் குவிப்பு நடவடிக்கைக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் தமிழ் மக்களின் அடையாள எதிர்ப்பாகவும் இந்த ஹர்த்தாலை முன்னெடுக்க அவர்கள் அழைப்பு விடுத்திருக்கின்றமையே முக்கிய விவகாரமாகும்.

பாதாள உலகக்குழுக்கள், போதை வஸ்துக் கடத்தல் மற்றும் அந்த வர்த்தக கும்பல்கள் போன்றவற்றின் அடாவடி சாம்ராஜ்யம் தென்னிலங்கையில் எல்லை மீறிக் கொடிகட்டிப் பறக்கின்றது. தினசரி துப்பாக்கிச் சூடும், வன்முறையும், ஆயுத கலாச்சார அராஜகங்களும் தெற்கில் எல்லை மீறியுள்ளன. அவற்றை கட்டுப்படுத்துவதில்தான் நாட்டினுடைய பாதுகாப்புத்துறை இன்று முன்னுரிமைக் கவனம் செலுத்த வேண்டும். முப்படையினர் மற்றும் பொலிஸாரின் பிரசன்னமும் கவனமும், அவதானமும் செலுத்தப்பட வேண்டிய அவசர, அவசிய நெருக்கடி நிலை தெற்கில்தான் இருக்கின்றது. அந்த வன்முறைகள் தொடர் கதையாக நீடிக்கின்றன.

ஆனால், தனது படையினரை - பாதுகாப்புப் பலத்தை - அந்த கொடுரங்களுக்கு எதிராகத் திருப்புவதற்கு மறுத்து, தன் படைபலத்தை முழுமையாக தமிழர் தாயகத்தில் ஆக்கிரமிப்பு நோக்கோடு குவித்து வைத்துப் பேணுகின்றது தென்னிலங்கை சிங்கள அரசு.

தெற்கில் கட்டுமட்டில்லாமல் தொடரும் பாதாள உலகக் குழுக்களின் அராஜகங்களைக் கட்டுப்படுத்தி, ஒடுக்குவதிலும் பார்க்க, தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து, அடிமைப்படுத்தி, அடக்கி, ஒடுக்கி, அடிமைப்படுத்தி வைத்திருப்பதில்தான் சிங்களத்தின் கவனம் அதீதமாக இருக்கின்றது.

அத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிரந்த் தமிழ் மக்களின் உணர்வெழுச்சிப் போராட்டங்களை - அரசியல் கொதிநிலையை - தொடர்ந்து பேண வேண்டிய கட்டாயம் தமிழ் அரசியல் தலைமைகளுக்கு இருக்கின்றது.

இத்தகைய இராணுவ அடாவடித்தனங்கள் வெளிப்படும் சமயங்களில் மக்களின் உணர்வெழுச்சியை தென்னிலங்கைக்கும் உலகுக்கும் வெளிப்படுத்துவதோடு, மக்களின் கருத்து நிலையையும் வலிமையாக பேணுவதற்கு இத்தகைய போராட்டங்கள் தவிர்க்க முடியாதவை தான்.



# மன்னாரில் 2ஆவது கட்டமாக காற்றாலை கோபுரம் அமைப்பு!

## இன்று 9 ஆவது நாளாகத் தொடர் போராட்டம்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னாரில் மக்களின் எதிர்ப்பை மீறி 2 ஆவது கட்டமாக முன்னெடுக்கப்பட்டுவரும் காற்றாலை மின் கோபுரம் அமைக்கும் நடவடிக்கை மற்றும் கனிய மணல் அகழ்வு போன்றவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தொடர்ச்சியாக மன்னார் பஜார் பகுதியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் இன்று திங்கட்கிழமை (11) 9 ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் பல கிராம மக்கள் கலந்து கொண்டு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

மன்னார் தீவு பகுதியில் 2 ஆவது கட்டமாகக் காற்றாலை மின் கோபுரங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (03) பாரிய காற்றாலைகளின் பாகங்கள் வாகனங்களில் மன்னார் நகர பகுதியை நோக்கி எடுத்து வரப்பட்டன. இந்த நிலையில் மன்னார் தள்ளாடி சந்தியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இந்த நிலையில் தள்ளாடி சந்தி மற்றும் மன்னார் சுற்றுவட்ட பகுதியில் தொடர்ச்சியாக மக்களும்,பொது அமைப்புக்கள் இணைந்து சுழற்சி முறையில் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்ற நிலையில் மக்களின் எதிர்ப்பையும் மீறி காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பதற்கான பாகங்கள் மன்னார் நகர பகுதிக்கு பலத்த பொலிஸாரின் பாதுகாப்புடன் எடுத்து வரப்பட்டன.

எனினும் தொடர்ச்சியாக போராட்டங்கள் இடம் பெற்று வந்தன.

இந்த நிலையில் குறித்த போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கீளியன் குடியிருப்பு, நடுக்குடா, கட்டுக்காரன் குடியிறுப்பு, பருத்திப்பன்னை, பாவிலுப்பட்டான் குடியிறுப்பு உள்ளிட்ட கிராம மக்களும் இன்றைய தினம் திங்கட்கிழமை (11) 9 ஆவது நாளாக இடம் பெற்று வருகின்ற போராட்டத்தில் கலந்து கொண்டு ஆதரவு வழங்கியுள்ளனர். மேலும் மன்னார் மாவட்ட ஒளிக்கலை ஒன்றியம் முழுமையான ஆதரவை வழங்கிய நிலையில் அவ் ஒன்றிய உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த போராட்டத்துக்கு மன்னார் பிரஜைகள் குழு, பொது அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள், பூரண ஒத்துழைப்பை வழங்கி வரும் நிலையில் மன்னார் மக்களும், இளையோரும் இணைந்து தொடர்ச்சியாக இரவு, பகல் பாராது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.









# வடக்கில் உலக வங்கியின் உதவியுடன் முன்னெடுக்கவுள்ள திட்ட கலந்துரையாடல்

உலக வங்கியின் உதவியுடன் வடக்கில் முன்னெடுப்பதற்கு அடையாளம் காணப்பட்ட திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் உள்ளடக்கப்படவேண்டிய திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோரின் பங்கேற்புடன் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

உலக வங்கியால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பில் கடந்த ஜூன் மாதம் 29 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலின் தொடர்ச்சியாக இன்றைய கலந்துரையாடல் இடம் பெற்றது.

உலக வங்கியால் முதல் கட்டத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள திட்டங்கள், அதன் தயார் நிலைமை என்பன தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. அத்துடன் புதிதாக எத்தகைய திட்டங்களை உள்ளடக்க வேண்டும் என்பது தொடர்பிலும், அதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் சில திட்டங்களுடன் தொடர்புடைய திணைக்களங்களுடன் ஆராய்ந்து அதன் முடிவுகளின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் இணைப்பாளர், அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் இணைப்பாளர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்கள், கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களின் திட்டமிடல் பணிப்பாளர்கள், வடக்கு மாகாண பிரதிப்பிரதம செயலாளர் – திட்டமிடல், உதவிப்பணிப்பாளர்கள், நகர அபிவிருத்தி அதிகார சபையினர் ஆகியோர் பங்கேற்றனர்.





# திருமலை மாவட்டத்தின் 35ஆவது பொலிஸ் அத்தியட்சகர் பதவியேற்பு!





**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலை மாவட்டத்தின் 35 ஆவது சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக எல்.வை.ஏ.எஸ்.அருண சந்திரபால இன்று (11) கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்கர் அலுவலகத்தில் நடைபெற்ற பொலிஸ் அணி வகுப்பு மரியாதையை அடுத்து அவர் பதவிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

இறுதியாக மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராகக் கடமையாற்றி இருந்த நிலையில் இவர் தற்போது திரு–கோணமலை மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

உதவிப் பொலிஸ் பரிசோதகராகத் திருகோணமலையில் தமது பொலிஸ் சேவையை ஆரம்பித்திருந்த இவர் அதன் பின்னர், பதவி உயர்வுகள் பலவற்றைப் பெற்ற நிலையில் தற்போது இம்மாவட்டத்தின் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# கிழக்கு மாகாண விளையாட்டு கந்தளாயில் நடைபெற்றது!

**(எஸ்.கீதபொன்கலன்)**

2025 ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண விளையாட்டு விழா நேற்று (10) கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரட்ணசேகர தலைமையில் கந்தளாய் லீலாரத்னா மைதானத்தில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் (9) தொடங்கிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற திறமையான இளைஞர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் வெற்றிக் கிண்ணங்கள் நேற்று வழங்கப்பட்டன.

இந்த விழாவில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர், கந்தளாய் பிரதேச சபைத் தலைவர், அதிகளவான இளைஞர்கள் மற்றும் விளையாட்டுத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.







# தமிழினப் படுகொலைக்குச் சர்வதேச நீதி கோரி வடக்கு, கிழக்கில் 'நீதியின் ஓலம்' போராட்டம்!

## தொடர்ந்து ஐந்து நாள்களுக்கு முன்னெடுக்க ஏற்பாடு



(வாலகிருஸ்ணா)

வடக்குக் கிழக்கில் ஐந்து நாள்கள் தமிழர் 'நீதியின் ஓலம்' எனும் போராட்டத்தின் வாயிலாக, தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதி கோரி கையொப்பப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தாயக செயலணியின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளரும் மாவட்ட சிவில்சமூக செயற்பாட்டாளருமான இருதயம் செல்வகுமார் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

தாயக செயலணி, சிவில் சமூக செயல்பாட்டாளர்களின் ஊடக சந்திப்பு இன்று (11) மட்டு ஊடக அமையத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்கள் மீது தொடர்ந்து நடைபெறும் இனவழிப்பின் சாட்சியாக, யாழ்ப்பாணம் செம்மணியில் அகழ்ந்தறியப்பட்ட மனிதப் புதைகுழிகளில் இருந்து 100 இற்கும் மேற்பட்ட எலும்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழி என்பது, ஈழத் தமிழர்கள்மீது இலங்கை அரச பயங்கரவாதத்தால் நடத்தப்பட்ட மனிதப் பேரவலத்தின் சிறு சாட்சியம் மட்டுமே. குறிப்பாக, 1996 ஆம் ஆண்டில் இலங்கை அரசுப் படையினரால் கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட, 16 வயதுடைய பாடசாலை மாணவி கிருஷாந்தியின் வழக்கின் மூலமாகவே இவ் விடயம் வெளிச்சத்துக்கு வந்தது.

இந்தப் படுகொலைக்கு முன்னதாக 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இடம்பெயர்வு காலத்திலும் அதன் பின்னரிலும் சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் உட்பட பல நூற்றுக் கணக்கானோர் மிகக்கொடூரமாக படுகொலை செய்து புதைக்கப்பட்டனர் என்பதனை நிரூபிக்கும் வகையில், கிருஷாந்தி படுகொலை வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்ட இலங்கை அரசுப் படைச் சிப்பாயின் பகிரங்க வாக்குமூலத்தின் அடிப்படையில், 1999 ஆம் ஆண்டில் 15 எலும்புத் தொகுதிகள் மீட்கப்பட்டன.

ஆயினும், பின்னர் ஆட்சிக்கு வந்த இலங்கை அரசியல் இயந்திரங்கள் அவற்றை முழுமையாக விசாரணை செய்யாமல், மூடி மறைத்து வந்தன. அண்மையில், அப்பகுதியில் கட்டுமான வேலைக்காக நடைபெற்ற அகழ்வுப் பணியின் போது மனித எலும்புக்கூடுகள் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால், இவ்விடயத்தை மூடி மறைக்கும் முயற்சிகள் அரசுத் தரப்பால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ் மக்களும் சர்வதேச சமூகமும் மேற்கொண்ட தொடர்ச்சியான அழுத்தங்களின் மூலமே இதுவரை பல எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. இதைப் பற்றிய கவனயீர்ப்பு நிகழ்வு, அணையாவிளக்கு போராட்டமாக தாயக மக்களால் முன்னெடுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

அதன் தொடர்ச்சியாக, வரும் 23.08.2025 சனிக்கிழமை தொடங்கி தொடர்ந்து ஐந்து நாட்கள் தமிழர் தாயகமெங்கும் 'நீதியின் ஓலம்' எனும் போராட்டத்தின் வாயிலாக, தமிழினப்படுகொலைக்கு, சர்வதேச நீதி கோரி கையொப்பப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இந்த கையொப்பப் போராட்டத்தின் கோரிக்கைகள்,

1. இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட செம்மணி உட்பட்ட அனைத்து மனிதப் புதைகுழிகளுக்கும் முழுமையான சர்வதேச நீதிவிசாரணை நடைபெறவேண்டும்.

2. எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மீது வலுவான தீர்மானம் கொண்டு வந்து, அனைத்து நாடுகளும் தெளிவான நிலைப்பாடு எடுக்க வேண்டும்.

3. தமிழர்கள்மீது இனப்படுகொலை செய்த படை அதிகாரிகளுக்கு அமெரிக்கா, பிரித்தானியா, கனடா போல அனைத்து நாடுகளும் பயணத் தடையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

4. தமிழர் இனவழிப்பில் பாதிக்கப்பட்டவர்களையும் சாட்சியங்களையும் பாதுகாக்க ஐக்கிய நாடுகள் சபை முழுமையான பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும்.

5. இலங்கை அரசு கையகப்படுத்தியுள்ள தமிழர்களின் பாரம்பரிய வாழ்விடங்களை விடுவிப்பதோடு, தமிழர் தாயகத்தை பல்வேறு வகையில் கையகப்படுத்தும் நடவடிக்கைகளை நிறுத்தச் சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

6. 'பயங்கரவாதத் தடைகள்' என்ற பெயரில் இன்றும் தொடரும் தமிழின அடக்கு முறைகளை நிறுத்தவும், நீண்ட காலமாகச் சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யவும் சர்வதேச அழுத்தம் தேவை.

7. கடந்த 76 ஆண்டுகளாகத் தொடரும் தமிழர் இனவழிப்பை நிறுத்தி, ஓர் சர்வதேச நீதிப்பொறிமுறை மூலம் தமிழர்களின் வாழ்வுரிமையை உறுதிசெய்ய அனைத்து நாடுகளும் ஆதரவு வழங்க வேண்டும்.

8. வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகள் தமிழர்களின் பூர்வீகத் தாயகம் என்பதையும், தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமை உடையவர்கள் என்பதையும் ஏற்றுக்கொண்டு, வட்டுக்கோட்டைத் தீர்மானம் மற்றும் திம்பு பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில் இறையாண்மை உள்ள தேச அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும்.

9. தமிழ்மக்களுக்கு வழங்கப்படும் தேச அதிகாரங்கள் எந்தக் காலத்திலும் மீளப்பெற முடியாத வகையில் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதை சர்வதேசமும் ஐ.நா வும் உறுதிப்படுத்த வேண்டும்.

மேற்கண்ட விடயங்களை வலியுறுத்தி, 'நீதியின் ஓலம்' என்ற கையொப்பப் போராட்டம் 23.08.2025சனிக்கிழமை காலை 10 மணி முதல் செம்மணியில் ஆரம்பித்து தமிழர் தாயகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும்.

இந்தப் போராட்டம் வெற்றியடைய, அனைத்து ஊடகங்களும், அமைப்புகளும், குறிப்பாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்கள், மாணவர் அமைப்புகள், சிவில் அமைப்புகள், மத அமைப்புகள், வர்த்தகர் சங்கங்கள், தொழிலாளர் சங்கங்கள், போக்குவரத்து கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள், ஊர்ச்சங்கங்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள், புத்திஜீவிகள் மற்றும் பொதுமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் அனைவரதும் பேராதரவும் ஒத்துழைப்பும் அன்புடன் வேண்டப்படுகிறது.

நாளை (12) கிழக்கு மாகாணத்தில் முக்கியமாக வீரமுனை பகுதியில், தொடர்ந்து ஆறு ஏழு நாள்களாக இலங்கை அரச படைகளுடன் சேர்ந்து இயங்கிய ஊர்காவல் படையினர் சேர்ந்து ஏறக்குறைய ஐந்து கிராமங்களைச் சேர்ந்த 400 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட நாளின் ஆரம்ப நாள். நாளைய தினம் வீரமுனை படுகொலை நாளாகும்.

ஆகவே வீரமுனை பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக நாளை மாலை 5 மணிக்கு உணர்வு எழுச்சியோடு கூடிய ஒரு கவனவீர்ப்பும் நினைவேந்தல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் வடக்கு, கிழக்கில் இருக்கும் சகல பிரதேசங்களிலும் அந்த நேரத்தில் அவர்களுடைய இடங்களிலும் அந்தந்த மாவட்டங்களிலும் இந்த படுகொலையை நினைவுகூர்ந்து நினைவேந்தல்களை மேற்கொள்ளுமாறு தாயக செயலணியினரால் அன்பான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நாளைய தினம் வீரமுனை பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பதாக அங்கு இருக்கும் ஏற்பாட்டுக் குழுவினரோடு இணைந்து தாயக செயலணியும் தங்களுடைய பேராதரவை வழங்கி நிற்கின்றது.

அந்த வகையில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தில் இருக்கக் கூடிய அனைத்து உறவுகளும் உணர்வெழுச்சியோடு கூட அந்த படுகொலை செய்யப்பட்ட மக்களுக்காகத் தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்துதோடு கூட ஒரு கவிஞர் போராட்டத்துக்கும் அழைப்பை விடுக்கின்றோம்.

இந்த மாதம் 30 ஆம் திகதி சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமாகும். அந்த வகையில் வடக்கு, கிழக்கில் உள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் ஒரு பகிரங்கமான அழைப்பை விடுத்துள்ளது.

தொடர்ச்சி▼

# தமிழினப் படுகொலைக்குச் சர்வதேச நீதி கோரி வடக்கு, கிழக்கில் ‘நீதியின் ஓலம்’ போராட்டம்!

தொடர்ச்சி▲

அந்த நாளில் கிழக்கில் மட்டக்களப்பிலும் வடக்கில் ஒரு மாவட்டத்திலும் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருக்கின்றனர்.

அந்த வகையில் தாயக செயலணியினர் ஆகிய நாங்களும் அந்த போராட்டத்துக்கு எங்களது பேராதரவை வழங்கி நிற்கின்றோம். அவர்களுடைய போராட்டம் வெற்றி பெற எங்களால் முடிந்த அனைத்து நடவடிக்கைகளிலும் நாங்கள் அவர்களோடு கைகோர்த்து நிற்போம்.

வலிந்து காணமலாக்கப்பட்ட உறவினருக்கும் அவர்களுடைய போராட்டத்துக்கும் எங்களுடைய பங்களிப்பும் இருக்கும். எங்களைப் போன்று இருக்கக் கூடிய அனைத்து அமைப்புகளும் அதற்கான ஆதரவையும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

அதோடு மீண்டும் எங்களது இந்த கையெழுத்து போராட்டத்துக்குத் தொடர்ந்து மக்களுடைய பேராதரவு எமக்கு வேண்டும். கையெழுத்து போராட்டம் நடைபெறுகின்ற ஒவ்வொரு இடங்களிலும் மக்கள் தன்னெழுச்சியாக வந்து எங்களுடைய போராட்டம் வெற்றி பெறுவதற்கும் ஒத்துழைக் வேண்டும். நீங்கள் வைக்கும் ஒவ்வொரு கையெழுத்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு அழுத்தம் கொடுப்பதாக இருக்கும்.

ஆகவே உணர்வு எழுச்சியோடு அனைவரும் திரண்டு வந்து தங்களுடைய கையொப்பங்களை இடுமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.– என்றார்.








# முன்னேஸ்வரம் ஆலய கொடியேற்றம் இன்று!

**(உடப்பு க.மகாதேவன்)**

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகாசமேத ஸ்ரீ முன்னைநாதர் சுவாமி ஆலயத்தின் வருடாந்த திருவிழாவின் கொடியேற்ற நிகழ்வு இன்று (11) திங்கட்கிழமை இடம்பெற்றது.

பிரதான குருவும் தர்மகர்த்தாவுமாகிய ஆலயக்குருக்கள் பிரம்மஸ்ரீ ச.பத்மநாபக்குருக்கள் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கொடிக்கம்பத்துக்கு உரிய சீலை யானையில் சுமக்கப்பட்டு உள்வீதி, வெளிவீதி வந்து பின்னர் கொடியேற்றம் இடம்பெற்றது. நாட்டின் பல பகுதியில் இருந்தும் இனமதம் பாராது பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்





# யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவு சங்கத்துக்கு புதிய பணிப்பாளர் சபை!







யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவு சங்கத்துக்கு புதிய பணிப்பாளர் சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பதவியில் இருந்த நிர்வாக சீரின்மை மற்றும் முறைகேடுகள் காரணமாக பொதுச் சபை உறுப்பினர்களால் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு பணிப்பாளர் சபை கலைக்கப்பட்டது. இந்த நிலையி புதிய பணிப்பாளர் சபை தெரிவு செய்யப்பட்டது.

சங்கத்தின் புதிய தலைவராக நீக்கிலஸ் பிரபாகரனும் உபதலைவராக சண்முகலிங்கம் சுரேஷ்குமாரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக ராஜ்குமார், தம்பிராசா மற்றும் அன்ரனி சில்வா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் வடமாகாண கூட்டுறவு திணைக்களத்தினரின் தலைமையில் நேற்று (10) சனிக்கிழமை கூட்டம் நடைபெற்று புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# கோபாலரெத்தினத்தின் மணிவிழாவும் நூல் வெளியீடும் களுதாவளையில்!

(வி.ரி. சகாதேவராஜா)

கிழக்கின் மூத்த இலங்கை நிர்வாக சேவை அதிகாரி ஓய்வு பெற்ற மூத்ததம்பி கோபாலரெத்தினத்தின் அறுபதாவது அகவை மணிவிழாவும் நூல் வெளியீடும் நேற்று (10) ஞாயிற்றுக்கிழமை களுதாவளை கலாசார மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றன.

ஓய்வு நிலை இலங்கை நிர்வாக சேவை அதிகாரி கலாநிதி சி. அமலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், அதிதியாகக் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் பி.தயாநந்தன், கிழக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சின் செயலாளர் எந்திரி ந.சிவலிங்கம், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா, கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ், முன்னாள் மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர் எம்.நசீர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

விழாவில் மணிவிழா சிறப்பு மலர்கள் இரண்டு வெளியிட்டு வைக்கப்பட்டன.

கலந்து கொண்ட அனைவருக்கும் இரண்டு நூல்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

சிறப்பு மலருக்கான ஆய்வுரைகளைக் கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் வேலுப்பிள்ளை குணரத்தினம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட பட்டதாரிகள் சங்கத் தலைவர் க.அனிரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறப்புரைகளை முன்னாள் கிழக்கு மாகாண இளைஞர் சேவை அதிகாரி பொன்.செல்வநாயகம் மற்றும் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் வித்தகர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் நிகழ்த்தினர்.

இடையிடையே கண்கவர் நடனங்கள் மற்றும் பாடல்கள் இடம்பெற்றன.

இறுதியாக மணிவிழா நாயகன் மூ.கோபாலரெத்தினம் திருமதி கீதா கோபாலரெத்தினம் ஆகியோர் பொன்னாடை போர்த்தி மாலை சூட்டி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

கிழக்கு மாகாண மணிவிழா ஏற்பாட்டுக் குழு விழாவை நடத்தியது.












### 'வாக்கு திருட்டு' பிரசாரம்:

# புதிய இணையதளத்தை தொடங்கினார் ராகுல்; மீண்டும் தேர்தல் ஆணையம் மீது குற்றச்சாட்டு



தேர்தல் ஆணையம் மீது மீண்டும் குற்றம் சாட்டியுள்ள ராகுல்காந்தி, வாக்கு திருட்டு தொடர்பாக புதிய இணையதளத்தை தொடங்கி, அந்த பிரச்சாரத்தில் பொதுமக்கள் இணைய வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

மகாராஷ்டிரா, கர்நாடகா, ஹரியானா போன்ற மாநிலங்களில் ஏராளமான வாக்காளர்கள் போலியாக சேர்க்கப்பட்டுள்ளனர். ஏராளமான வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர் என்று காங்கிரஸ் மூத்த தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி குற்றம் சாட்டி வருகிறார்.

மேலும், பா.ஜ.கவுடன் தேர்தல் ஆணையம் கூட்டு சேர்ந்து, பல்வேறு முறைகேடுகளில் ஈடுபடுகிறது என்றும் ராகுல் குற்றம் சாட்டினார். இதற்கு தேர்தல் ஆணையமும் பதில் அளித்துள்ளது.

இந்நிலையில், தேர்தல் ஆணையத்தின் மீது ராகுல் காந்தி மீண்டும் குற்றம்சாட்டி உள்ளார்.

இதுகுறித்து ராகுல் காந்தி நேற்று தனது எக்ஸ் வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"வாக்கு திருட்டு என்பது ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படை நோக்கத்தின் மீது நடத்தப்படும் தாக்குதலாகும். தெளிவான வாக்காளர் பட்டியல் என்பதுதான், நேர்மையான சுதந்திரமான தேர்தலை உறுதி செய்யும். தேர்தல் ஆணையத்திடம் நாங்கள் வைக்கும் கோரிக்கை எல்லாம் தெளிவாக உள்ளது. தேர்தல் ஆணையம் வெளிப்படையாக செயல்பட வேண்டும்.

மின்னணு வாக்காளர் பட்டியலை வெளியிட வேண்டும். அப்போதுதான் நாட்டு மக்களும் அரசியல் கட்சிகளும் அதை ஆய்வு செய்ய முடியும். எங்களுடைய இந்த கோரிக்கையை வலியுறுத்தி பிரச்சாரம் தொடங்குகிறோம். அதற்காக 'http://votechori.in/ecdemand' என்ற புதிய இணையதளத்தை தொடங்கி வைக்கிறோம். இணையதளத்தில்பொதுமக்கள் தங்கள் கருத்துகளைக் கூறி, பிரச்சாரத்தில் பங்கேற்க வேண்டும்.

இந்தப் போராட்டம் நமது ஜனநாயகத்தை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக நடத்தப்படுகிறது. " என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், பாஜக தேசிய செய்தித் தொடர்பாளர் கவுரவ் பாட்டியா கூறும்போது,

"தேர்தலில் தோல்வி அடைந்த காங்கிரஸ் கட்சி, ஆதாரங்களை வெளியிடாமல் தேர்தல் ஆணையத்தின் மீது புகார் கூறுகிறது" என்று கண்டனம் தெரிவித்துள்ளார்



# கமலுக்கு கொலை மிரட்டல்; துணை நடிகர் மீது முறைப்பாடு

கமல்ஹாசனுக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக துணை நடிகர் மீது மக்கள் நீதி மய்யம் கட்சியினர் சென்னை பொலிஸ் ஆணையர் அலுவலகத்தில் புகார் அளித்துள்ளனர்.

நிகழ்ச்சி ஒன்றில், மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான கமல் ஹாசன் பேசும்போது, 'சனாதன தர்மம் பற்றி கருத்து தெரிவித்திருந்தார்.

இதற்கு துணை நடிகர் ரவிச்சந்திரன் கடும் எதிர்ப்பு தெரிவித்து யூடியூப் சேனல் ஒன்றுக்கு பேட்டி அளித்திருந்தார். அதில், சனாதன தர்மம் பற்றி பேசிய கமல்ஹாசனுக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக கூறப்படுகிறது.

இதைத்தொடர்ந்து, மக்கள் நீதி மய்யம் கட்சித் துணை தலைவர் மவுரியா தலைமையில் கட்சியினர் சென்னை பொலிஸ் ஆணையர் அலுவலகத்தில் ரவிச்சந்திரன் மீது நேற்று புகார் மனு அளித்தனர்.



# இந்தியாவின் வளர்ச்சியால் பொறாமையில் உலக நாடுகள்

## வெங்கையா நாயுடு கருத்து

இந்தியாவின் வளர்ச்சி சில நாடுகளுக்கு பொறாமையை ஏற்படுத்தியுள்ளது என்று முன்னாள் குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு தெரிவித்துள்ளார்.

எம்.எஸ். சுவாமிநாதன் நூற்றாண்டு சர்வதேச கருத்தரங்கில் உரையாற்றிய வெங்கையா நாயுடு, " இந்தியா வேகமாக வளர்ச்சியடைந்து உலகம் முழுவதும் அங்கீகாரத்தை பெற்று வருகிறது. இந்தியாவின் வளர்ச்சி சில நாடுகளுக்கு பொறாமையை ஏற்படுத்தியுள்ளது. நமது வளர்ச்சியை அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை.

அஜீரணப் பிரச்சினையால் அவர்கள் அவதிப்படுகின்றனர். உலக பொருளாதாரத்தில் இந்தியா 4 ஆவது இடத்தில் இருந்து 3 ஆவது இடத்துக்கு முன்னேறி வருகிறது. விவசாயிகள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் இளைஞர்களின் பங்களிப்பால் நம்நாடு நிச்சயம் மேலும் வளர்ச்சியடையும்." என்றார்.

# பஹல்காம் தாக்குதலில் கணவரை இழந்த ஹிமான்ஷி 'பிக்பாஸில்' பங்கேற்கிறார்



பஹல்காம் தாக்குதலில் கணவரை இழந்த ஹிமான்ஷி 'பிக்பாஸ்' நிகழ்ச்சியில் பங்கேற்கிறார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த ஏப்ரல் 22 ஆம் திகதி காஷ்மீரின் பஹல்காமில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதலை நடத்தினர். இதில் 26 சுற்றுலா பயணிகள் உயிரிழந்தனர்.

இந்த தாக்குதலில் தேனிலவுக்காக பஹல்காம் சென்ற கடற்படை அதிகாரி வினய் நர்வால் உயிரிழந்தார். கணவரின் உடல் அருகே அவரது மனைவி ஹிமான்ஷி கதறி அழுத காட்சி சமூக வலைதளங்களில் வைரலாக பரவி பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இந்நிலையில் எதிர்வரும் 24 ஆம் திகதி தொடங்க உள்ள இந்தி பிக்பாஸ் நிகழ்ச்சியில் ஹிமான்ஷி பங்கேற்கவுள்ளார் என தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்த நிகழ்ச்சியை பிரபல நடிகர் சல்மான் கான் தொகுத்து வழங்க உள்ளார். கிரிக்கெட் வீரர் யுவேந்திர சாஹலிடம் இருந்து விவாகரத்து பெற்ற நடிகை தனுஸ்ரீ வர்மா, தொலைக்காட்சி தொடர் நடிகைகள் மீரா தியோஸ்தலே, பாவிகா சர்மா, யூ டியூபர் எல்.விஸ். யாதவ் உள்ளிட்டோரும் இந்தி பிக்பாஸ் நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளனர் என தகவல்கள் வெளியாகி உள்ளன.

யூ டியூபர் எல்.விஸ். யாதவ் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், "ஹிமான்ஷி கல்லூரியில் என்னுடன் படித்தவர். கணவரை இழந்து வேதனையில் தவிக்கும் அவரை செல்போனில் அழைத்துப் பேச தயக்கமாக இருக்கிறது." என்று தெரிவித்துள்ளார்.

# கியேவ் இல்லாத ஒப்பந்தம் இறந்த முடிவுகளுக்கு சமம்

## உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவிப்பு

ரஸ்யாவுடனான எந்தவொரு சமாதானப் பேச்சுவார்த்தையிலும் கியேவும் இடம்பெற வேண்டும் என்று ஐரோப்பிய நட்பு நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை அலஸ்காவில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ரஸ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் சந்திப்பை நடத்தவுள்ளார்.

இதற்கு முன்னோடியாகவே இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, போலந்து, பின்லாந்து மற்றும் ஐரோப்பிய ஆணையகத் தலைவர்கள்



கூட்டாக இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளனர்.

உக்ரைன் ஜனாதிபதியும் பங்கேற்கும் வகையில் சந்திப்பை நடத்துவதற்கு ட்ரம்ப் தயாராகவே உள்ளார் என வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும் இப்போதைக்கு, ரஸ்ய ஜனாதிபதி ஆரம்பத்தில் கோரியபடி, அது ட்ரம்ப் -புடின் உச்சி மாநாடாகவே நடைபெறும் என்று வெள்ளை மாளிகை அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

புட்டினை பொறுத்தவரையில், ஜெலன்ஸ்கியை நேரடியாக சந்திக்க விரும்பாமையே இதற்கான காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் கியேவ் இல்லாத எந்தவொரு ஒப்பந்தமும் இறந்த முடிவுகளுக்கு சமம் என்று உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேலின் திட்டங்களுக்கு பல்வேறு நாடுகள் கண்டனம்





காசா நகரத்தை கட்டுப்பாட்டில் கொண்டு வரும் இஸ்ரேலின் திட்டங்களை ஐக்கிய நாடுகள் சபைக்கான, பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் கண்டித்துள்ளனர். எனினும் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான சிறந்த வழி இது மாத்திரமே என்று பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வலியுறுத்தியுள்ளார்.

இந்தநிலையில் திட்டமிட்ட தாக்குதல் நகர்வு மிக விரைவில் ஆரம்பிக்கும் என்றும் அது நகரும் என்றும் காசாவை ஹமாஸிடமிருந்து விடுவிக்கும் எனவும் நெதன்யாகு செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

காசாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இஸ்ரேலிய பணயக்கைதிகளே பட்டினியால் வாடுகின்றனர்.

மாறாக இஸ்ரேல், காசா மக்களை பட்டினியில் வைத்திருப்பதாக கூறப்படுவதை அவர் மறுத்துரைத்தார்.

இதற்கிடையில், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபை அவசரக் கூட்டத்தில் இஸ்ரேல் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது.

இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் பிற நாடுகள் இந்த திட்டத்தினால், சர்வதேச மனிதாபிமான சட்டத்தை மீறும் அபாயம் இருப்பதாக எச்சரித்துள்ளன.

இஸ்ரேலின் இந்த திட்டம், பணயக்கைதிகளை பாதுகாக்க எதுவும் செய்யாது, மேலும் அவர்களின் உயிருக்கு மேலும் ஆபத்தையே விளைவிக்கும் என்று அந்த நாடுகள் எச்சரித்துள்ளன.

எனினும் அமெரிக்கா இஸ்ரேலைப் பாதுகாக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டுள்ளது.

பணயக்கைதிகளை விடுவிப்பதற்கும் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், தமது நாடு அயராது உழைத்து வருவதாக அமெரிக்க தூதர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் இஸ்ரேல் முழுவதும் ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் வீதிகளில் இறங்கி அரசாங்கத்தின் திட்டத்தை எதிர்த்துப் போராடி வருகின்றனர்.

இந்த திட்டம், பணயக்கைதிகளின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் என்று அவர்கள் தமது அச்சத்தை வெளியிட்டுள்ளனர்.

# துருக்கியை உலுக்கியது சக்தி வாய்ந்த நில அதிர்வு


துருக்கியில் சக்தி வாய்ந்த நில அதிர்வு ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நில அதிர்வு 6.1 மெக்னிடியூட் அளவில் பதிவாகியுள்ளது.

இஸ்தான்புல், இஸ்மிர் உள்ளிட்ட பல்வேறு நகரங்களிலும் நில அதிர்வின் தாக்கம் உணரப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த நில அதிர்வினால் பல கட்டடங்கள் சேதமடைந்துள்ளன என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.





# காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் அல்ஜசீரா ஊடகவியலாளர்கள் ஐவர் பலி

காசா நகரத்தின் அல்சிபா மருத்துவமனைக்கு அருகில் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் அல்ஜசீராவின் ஐந்து ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மருத்துவமனையின் முன்வாயில் தாக்கப்பட்டபோது அந்த பகுதியில் கூடாரத்திலிருந்த அனஸ் அல்-ஷரீப் மற்றும் முகமது க்ரீகே, கேமரா மேன்கள் இப்ராஹிம் ஜாஹர், முகமது நௌஃபல் மற்றும் மோமன் அலிவா ஆகியோர் கொல்லப்பட்டனர் என அல்ஜசீரா தெரிவித்துள்ளது.

இந்த இலக்குவைக்கப்பட்ட படுகொலை ஊடக சுதந்திரத்தின் மீதான மற்றுமொரு அப்பட்டமான மற்றும் முன்கூட்டியே திட்டமிடப்பட்ட தாக்குதல் என அல்ஜசீரா தெரிவித்துள்ளது.

அல்சிபா மருத்துவமனைக்கு அருகில் இஸ்ரேல் மேற்கொண்ட இந்த தாக்குதலில் ஏழு பேர் கொல்லப்பட்டனர் என அல்ஜசீரா தெரிவித்துள்ளது.









கனடா முரசு
திங்கட்கிழமை 11/08/2025

## கனடாவின் பல பகுதிகளில் வெப்பநிலை உயர்கின்றது

கனடாவின் பல பகுதிகளில் வெப்பநிலை உயர்வாகக் காணப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பகல்நேரத்தில் வெப்பநிலை சுமார் 30 பாகை செல்சியஸுக்கு மேல் உய C02



# கனடாவில் இருந்து தாய்லாந்திற்கு சுற்றுலா சென்ற சிறுமி உயிரிழப்பு

கனடாவில் இருந்து தாய்லாந்திற்கு குடும்பத்தினருடன் சுற்றுலா சென்ற இலங்கைத் தமிழ் சிறுமி ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், மயிலிட்டியை சொந்த இடமாக கொண்டவரும் கனடாவில் வசித்துவருபவரும் ஞானசேகரன் றேச்சல் தம்பதியரின் மூன்றாவது மகளான யொஹானா (வயது 10) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கனடாவில் இருந்து குடும்ப சகிதம் தாய்லாந்திற்கு விடுமுறை கால சுற்றுலா சென்றிருந்த நிலையில் இத்துயர சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடந்த 07 ஆம் திகதி வியாழக்கிழமை தாய்லாந்தில் உள்ள் சுற்றுலா தலம் ஒன்றில் கடலில் குளித்த போது எதிர்பாராத விதமாக மேற்படி சிறுமி கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.





# ஒன்றாரியோவில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் பலி

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து 'ஹைவே' 401 கிழக்கு நோக்கி செல்லும் பாதையில் 'ஹைவே' 410க்கு செல்லும் மேம்பாலத்தில் இடம்பெற்றுள்ளது.

வாகனம் கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதுடன், இதில் பயணித்த 23 வயது பெண் உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், வாகனத்தில் பயணம் செய்த 25 வயதான பெண் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும், அவருக்கு உயிராபத்து கிடையாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் பாதை மூடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# கனடாவில் தேடப்பட்டு வந்த குற்றவாளிகளில் ஒருவர் கைது



கனடாவில் மிகவும் தேடப்பட்டு வந்த குற்றவாளி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு சாஸ்காடூனில் இடம்பெற்ற கொலை மற்றும் போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டுக்கள் மேற்படி நபருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ளன.

கனடாவின் மிகவும் தேடப்படும் 25 குற்றவாளிகள் பட்டியலில் மேற்படி நபர் 10 ஆம் இடத்தை வகிக்கிறார் என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபர் கனடாவிற்கு திரும்பும்போது மான்ட்ரியாலில் உள்ள விமான நிலையத்தில் வைத்து கைது செய்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மொன்ட்ரியாலின் ட்ரூடோ சர்வதேச விமான நிலையத்தில் 36 வயதான ஜொனாதன் ஓவெலெட்-ஜென்ட்ரன் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

2022 ஆண்டில் சாஸ்காடூனின் மெல்ரோஸ் அவென்யூவின் 700 பிளாக்கில் இடம்பெற்ற ஒரு கொலை வழக்கில் ஓவெலெட்-ஜென்ட்ரன் சந்தேக நபராக அடையாளம் காணப்பட்டார் என தெரிவிக்கப்பட்டது.

## கனடாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

கனடிய சுற்றாடல் திணைக்களம் இது தொடர்பிலான எச்சரிக்கையை விடுத்துள்ளது. மேலும் இது அடுத்த சில நாள்களுக்கு நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால், வடமேற்கு பிரதேசங்கள் மற்றும் ஒன்டாரியோ, கியூபெக், நியூ்ஃபவுண்ட்லாண்ட் மற்றும் லாப்ரடோர் ஆகிய மாகாணங்களில் வெப்ப அலை எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சியான உயர் வெப்பநிலை காரணமாக, வெப்ப மயக்கம் அல்லது வெப்ப சோர்வு போன்ற வெப்பம் தொடர்பான நோய்களின் அபாயம் அதிகரித்துள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எந்தவொரு நபரின் உடல்நலத்திற்கும் தீவிர வெப்பம்



ஆபத்தை ஏற்படுத்தலாம் என்பதால், இந்த நிலைமைகளின் அறிகுறிகள் குறித்து மக்கள் அவதானமாக இருக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.





# ஒன்டாரியோ வீடொன்றில் ஏற்பட்ட வெடிப்பு சம்பவத்தில் ஒருவர் காயம்

கனடாவின் ஒன்டாரியோவின் பாரி நகரில் வீடொன்றில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மார்ஷல் தெரு மற்றும் தோர்ன் க்ரெஸ்ட் சாலை அருகே உள்ள ஒரு வீடொன்றில் வெடிப்பு மற்றும் பாரிய தீ விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்தில் வீடு முற்றிலும் தீக்கிரையானது எனவும் இதில் ஒருவர் காயமடைந்த நிலையில் உள்ளூர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார், தீயணைப்புப் படையினர் மற்றும் உயிர்காப்பு மருத்துவ பணியாளர்கள் உள்ளிட்ட பலரும் சம்பவம் இடத்திற்கு விரைந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விபத்துக்கான காரணங்கள் எதுவும் இதுவரையில் வெளியிடப்படவில்லை, விபத்து குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.













